D236

13 NOV 2021

சுருக்கம்

வீட்டுவசதி - தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் நிதியைப் பயன்படுத்தி, சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் திட்டப்பகுதியில் 125 மனைகள் ரூ.7.54 கோடியில் (நிலத்தின் விலையை தவிர்த்து) மனைமேம்பாட்டு திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

==========

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீவ3(1)) துறை

அரசாணை (நிலை) எண். 128

நாள். 12.11.2021
பிலவ வருடம், ஐப்பசி 26,
திருவள்ளுவர் ஆண்டு 2052.

படிக்கப்பட்டது:

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அவர்களின் கடித எண்.PW/12026/2021, நாள் 13.10.2021.

=======

ஆணை:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் 2021-2022 ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கை எண்.26-இல் 01.09.2021 அன்று சட்டமன்றத்தில் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

"தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மனை மேம்பாட்டு திட்டம் வாயிலாக சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் திட்டப்பகுதியில் 117 மனைகள் ரூ.4.75 கோடியில் மனைகள் மேம்படுத்தப்படும்."

2. அதன்படி, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அவர்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் நிதியைப் பயன்படுத்தி, சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் திட்டப்பகுதியில் 125 மனைகள் ரூ.7.54 கோடியில் (நிலத்தின் விலையை தவிர்த்து)

Verified © RealEstate

மனைமேம்பாட்டு திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அறிவிப்பு எண்.6	திட்ட விவரங்கள்	மாவட்டம்	உத்தேசிக்கப் பட்டுள்ள மனைகள்/ வீடுகள்/ அடுக்குமாடி குடியிருப்புகள்	மொத்த அலகுகள்	தோராய திட்ட மதிப்பீடு (நிலத்தின் விலையை தவிர்த்து) (ரூ.கோடியில்)	நிதி ஆதாரம்
1	சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் திட்டப்பகுதி-II-ல் 27 குடியிருப்பு மனைகள் (16-உஇவி, 11-மஇவி, மற்றும் 1 வணிக மனை) மனைகளுக்கான மனை மேம்பாட்டுத் திட்டம் (பரப்பு 1.95 ஏக்கர்)	சென்னை	மனைகள்	28	2.89	வாரிய நிதி
2	சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் திட்டப்பகுதி-II-ல் 10 குடியிருப்பு மனைகள் மற்றும் 1 வணிக மனைகளுக்கான மனை மேம்பாட்டுத் திட்டம் (பரப்பு 0.36 ஏக்கர்)	சென்னை	மனைகள்	11	0.47	வாரிய நிதி
3	சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் திட்டப்பகுதி-III-ல் 85 குடியிருப்பு மனைகள் (11-உஇவி, 43-மஇவி, 31 குஇவி. மற்றும் 1 வணிக மனை) மனைகளுக்கான மனை மேம்பாட்டுத் திட்டம் (பரப்பு 4.13 ஏக்கர்)	சென்னை	மனைகள்	86	4.18	வாரிய நிதி
	மொத்தம்			125	7.54	

மேலும், மேற்காணும் கருத்துருவிற்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 20.10.2021 தேதியிட்ட நிகழ்ச்சி நிரல் எண்.4.03 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

Verified RedEstate™

3. அரசு, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அவர்களின் கருத்துருவினை நன்கு ஆராய்ந்து, அதனை ஏற்று வாரியத்தின் நிதியைப் பயன்படுத்தி, சென்னை மாவட்டம் சோழிங்கநல்லூர் திட்டப்பகுதியில் 125 மனைகள் ரூ.7.54 கோடியில் (நிலத்தின் விலையை தவிர்த்து) மனைமேம்பாட்டு திட்டத்திற்கு, ஒப்பந்தப்புள்ளி அழைப்பிற்கு முன் அல்லது நிதி ஒப்பளிக்கும் முன் வாரியத்தின் துணைக் குழுவால் (நிதித்துறை உறுப்பினர் உட்பட்ட) விரிவான மதிப்பீட்டைத் தயாரித்து ஆய்வு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிர்வாக ஒப்புதல் அளித்து, ஆணையிடுகிறது.

4. மேற்கண்ட ஆணையின்படி தகுந்த நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.46130/நிதி(வீ.வ(ம)நவ)/ 2021, நாள்.02.11.2021-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹிதேஷ் குமார் எஸ். மக்வானா
முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை - 107.
முதன்மை கணக்கு அலுவலர் (A&E), சென்னை - 600 018.
முதன்மை கணக்கு அலுவலர் (G&SSA), சென்னை - 600 018.

நகல்:-

மாண்புமிகு அமைச்சர் (வீ.வ. (ம) ந.வ.) அலுவலகம், சென்னை -09.
கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மை தனிச்செயலர், நிதித்துறை , சென்னை - 09.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை - 09.
நிதித்(வீ.வ.(ம) ந.வ.) துறை, சென்னை - 09.
வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை (அ.ந.மு./வ.செ.)த்துறை, சென்னை - 09.
இகோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
12/11/21

Verified RegiEstate